DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 56/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : திருமதி. முத்துலட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th March2026.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தென்காசி மாவட்ட தனிப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முந்தைய விசாரணை அதிகாரியான கமலாதேவிபணிமாறுதலில் சென்றுவிட்டபிறகு, 08.07.2016 ம் தேதி இவ்வழக்கின் விசாரணையை நான் மேற்கொண்டேன். நான் வழக்குகோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 15.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை சாட்சிகள் மாரிச்செல்வம் மற்றும் சமுத்திரம் ஆகியோர் முன்னிலையில் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்ய்பபடுகிறது**. பின்னர் சாட்சிகள் முத்துக்கருப்பாயி, சண்முகத்தாய், மாடசாமி, கிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து

வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் 1 முதல் 5 அரசுதரப்பு பட்டியல் சாட்சிகளை விசாரிக்கும்போது அவர்கள் முந்தைய விசாரணை அதிகாரியான கமலாதேவியிடம் கூறியதுபோல வாக்குமூலம் அளித்ததால் அவர்களது வாக்குமூலத்தை நான் தனியாக பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் 2ம் எதிரியை தேடிவந்தநிலையில் 29.11.2016 ம் தேதி காலை 10.00 மணிக்கு புளியம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் அன்றைய தினமே வழக்கின் விசாரணையை முடித்து இவ்வழக்கு எதிரிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில கூறிய நாள் மற்றும் நேரத்தில் வழகக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சம்பவ இடத்தை பார்வையிட்டு நான் முதல்விசாரணையில் கூறிய சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், நான் முதல்விசாரணையில் கூறியவாறு சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை பதிவுசெய்யவில்லை என்றாலும், நான் முதல்விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் 2ம் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**